

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட மேலத்திருச்செந்தூர் பஞ். நா.முத்தையாபுரம் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ. 28.05 லட்சத்தில் புதிய வகுப்பறைகள் புதிய கட்டடங்களை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், திருச்செந்தூர் ஆர்.டி.ஓ. குருச்சந்திரன், தாசில்தார் பாலசுந்தரம், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அன்றோ, வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊராட்சிகள்) இப்ராஹிம் சுல்தான், திருச்செந்தூர் நகராட்சி துணைத்தலைவர் செங்குழி ரமேஷ், பஞ்சாயத்து தலைவர்கள் ராஜேஸ்வரன்(காயாமொழி), மகாராஜன்(மேலத்திருச்செந்தூர்), திலகவதி பாலன் (பள்ளிப்பத்து), தி.மு.க. வர்த்தக அணி இணை செயலாளர் உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராமஜெயம், முன்னாள் அமைப்பாளர் பில்லா ஜெகன், திருச்செந்தூர் நகராட்சி கவுன்சிலர் செந்தில்குமார், நகர செயலாளர் வாள்சுடலை, முன்னாள் பேரூராட்சித் தலைவர்கள் செந்தமிழ் சேகர், மாமல்லன், மாவட்ட பஞ்சாயத்து கவுன்சிலர் செல்வகுமார், மேல திருச்செந்தூர் கவுன்சிலர்கள் சின்னத்துரை, சுதா, ஜெயக்கொடி, மீனவர் நல வாரிய உறுப்பினர் ஜெபமாலை, வார்டு செயலாளர்கள் முருகன், அமலிநகர் சந்திரன், இளைஞரணி சிவராசன், வி.சி.க. இளஞ்சிறுத்தைகள் மாவட்ட அமைப்பாளர் விடுதலைசெழியன், பள்ளி தலைமையாசிரியர் செல்வகுமார் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்டத்தில் வருகிற 17ஆம் தேதி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

# 1500 கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கல்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை. பிப்.14-

சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும் , கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது. கழக தலைவர் தளபதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் எண்ணத்தினை நிறைவேற்றும் வகையில் செயல்பட்டு வரும் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 17ஆம் தேதி சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்கிறார். 17ஆம் தேதி சனிக்கிழமை காலை 10 மணி அளவில் திருப்பத்தூர் தாலுகா வைரவன் பட்டியில் அமைந்துள்ள பிரம்மாண்டமான திடலில் நான்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 1500 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி விழா சிறப்புரையாற்றுகிறார் .

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணி செயலாளராகவும் அமைச்சராகவும் பொறுப்பேற்ற நாள் முதல் தமிழகமக்களின் உரிமைக்காகவும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் குரல் கொடுத்து வருகிறார். நாட்டின் ஒருமைப்பாட்டினை காக்கும் வகையில் சிறப்பான முறையில் மாநில உரிமைகளைப் பேசி பணியாற்றி வருகிறார். உதய நிதிஸ்டாலின் அவர்களின் பேச்சுக்கள் இந்திய அளவில் அனைவராலும் ஈர்க்கப்பட்டு அனைத்து அரசியல் தலைவர்களின் கவனத்திற்கு உள்ளாகியுள்ளது. அத்தகைய இளம் தலைவர் அவர்கள் நமது மாவட்டத்திற்கு 17ம்தேதி சனிக்கிழமை வருகை தருகிறார். தலைவர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு கழகத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த கழக மூத்த முன்னோடி களின் கழகப் பணியினை பாராட்டி பொற்கிழி வழங்கி சிறப்புரையாற்றுகிறார். 1500 முன்னோடிகளுக்கு தங்க முலாம் பூசிய மெடல், நிதி உதவி,வேட்டி ஆகியவைகள் தலைவர் கலைஞர் தளபதி முதல்வர் இளைஞரணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஆகியோரின் உருவப் படத்துடன் உள்ள வண்ணபையில் இத்தகைய உதவிகளை வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் பாராட்டப்படுகிறார்கள். விரைவில் நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் இண்டியா கூட்டணி வெற்றி பெற்று. மக்கள் விரோத பாசிச ஆட்சி நடத்தி வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசை அகற்றுவதற்காக கழகத் தொண்டர்கள் ஆற்றவேண்டிய தேர்தல் பணி குறித்து சிறப்புரையாற்றிட உள்ளார். எனவே இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்புஅணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன். முன்னதாக 16ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலையில் மதுரையிலிருந்து கார் மூலம் மூலம் திருப்பத்தூர் வருகைதரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை வடக்கு ஒன்றியம் பெருமாள் பட்டியில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா100அடி உயர நினைவு கொடி கம்பத்திலும், சிங்கம்புணரி வடக்கு ஒன்றியம் அரளிக்கோட்டையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு 100அடி நினைவு கம்பத்திலும் கழக கொடியினை ஏற்றி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார். தொடர்ந்து 17ஆம்தேதி சனிக்கிழமை காலையில் வைரவன் பட்டியில் பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். பிற்பகல் 12.30மணி அளவில் தேவகோட்டையில் முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வே.ருசோவின் வீட்டிற்கு செல்கிறார். அதை தொடர்ந்து ராமநாதபுரம் செல்கிறார். இத்தகவலை மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான கேஆர்.பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.



# நெல்லை மத்திய மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை.பிப்.14-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் இன்று (14.2.2024 - புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவை தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெறுகிறது.என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (4ஆம் தேதி புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் நெல்லை மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் 16.2.2024 அன்று மாலை நெல்லையில் நடைபெறும் 2024 நாடாளுமன்ற தேர்தல்”உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் ”பாசிசம் வீழட்டும் இந்தியா வெல்லட்டும் என்ற தலைப்பில் நடைபெறும் மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்ற இருக்கிறார்கள். இந்த கூட்ட ஏற்பாடுகள் குறித்தும்.



வருகிற 18.2.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெல்லையில் நடைபெறும் கழக முன்னணியினர் இல்ல திருமண விழாக்களிலும்,அரசு சார்பில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் முடிவுற்ற சந்திப்பு பேருந்து நிலையம் மற்றும் மற்ற பணிகளையும்,பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தும் அடிக்கல் நாட்டியும் சிறப்பிக்க உள்ளார்கள்.

இந்த இரு நிகழ்வுகள் குறித்தும் மற்றும் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது.

எனவே மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு,உறுப்பினர்கள், பகுதி,ஒன்றிய,பேரூர், கழக செயலாளர்கள்,கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மதுரை மாநகர் மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை, பிப்.14-

மதுரை மாநகர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை (15.02.2024-வியாழக் கிழமை) அன்று மாலை 6.00மணி அளவில் பசுமலை கோபால்சாமி திருமண மண்டபத்தில்அவைத்தலைவர் மா.ஒச்சு பாலு தலைமையில்நடைபெற இருப்பதால் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழகமுன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.



பொருள்: நாடாளுமன்ற தேர்தல் சம்பந்தமாக கழக வளர்ச்சி பணிகள் குறித்து

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




தேனி வடக்கு மாவட்டம் கழகச் செயற்குழுக் கூட்டம் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டப் பொருளாளர் சுரேஷ் மாவட்டத் துணைச் செயலாளர் கண்ணன் பொதுக்குழு உறுப்பினர்கள ரமேஷ் முருகேசன், நகரச் செயலாளர் நாராயண பாண்டியன் மற்றும் ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர் பேரூர் செயலாளர்கள், கழக மூத்த முன்னாடிகள் கலந்து கொண்டனர்.


